5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 58 முதல் 62 வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு 2018–2019 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 65 முதல் 72 வரையிலான 8 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. சு. ரவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன், ஏழைகளின் பங்காளன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்கி, அனைவருக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018–2019 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 5–வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.